**செய்தி வெளியீடு எண்: 518** **நாள்: 17.07.2020**

**<u>இன்று (17.7.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்றப் பணிகளைத் திறந்து வைத்து ஆற்றிய உரை:</u>**

எடப்பாடி நகராட்சிக்கு புதிதாகக் கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலகக் கட்டடத் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற அனைவருக்கும் வணக்கம்.

எடப்பாடி நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் முதலீட்டு மானியம் மற்றும் இயக்கம் இடைவெளி நிரப்பு நிதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட வெள்ளாண்டிவலசில் 1,156 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் முதல் தளத்துடன் கூடிய எடப்பாடி நகராட்சி அலுவலக புதிய கட்டடம் இன்றையதினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம், சேலம் மாவட்டம், மேச்சேரி மற்றும் நங்கவள்ளி ஒன்றியத்திலுள்ள 698 கிராமக் குடியிருப்புகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலதன மானிய நிதித் திட்டத்தின் மூலம், ரூபாய் 3.83 கோடி மதிப்பீட்டில் ஜலகண்டாபுரம் பேரூராட்சி, ரூபாய் 1.87 கோடி மதிப்பீட்டில் வனவாசி பேரூராட்சி, ரூபாய் 4.53 கோடி மதிப்பீட்டில் நங்கவள்ளி பேரூராட்சி, ரூபாய் 4.03 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேச்சேரி பேரூராட்சி, ரூபாய் 3.04 கோடி மதிப்பீட்டில் வீரக்கல்புதூர் பேரூராட்சி என மொத்தம் 5 புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளுக்கு ரூபாய் 17.30 கோடி மதிப்பீட்டில் இன்றையதினம் நடைபெறுகின்ற நிகழ்ச்சியில் என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலம் ரூபாய் 2.42 கோடி மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சியில், ஜலகண்டாபுரம்–சின்னப்பம்பட்டி சாலைப்

பிரிவிலிருந்து வெள்ளாளபுரம்–அக்கரைப்பட்டி செல்லும் சாலையில் கி.மீ.1/4ல் சரபங்கா நதியின் குறுக்கே புதிதாகக் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம் என்னால் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பள்ளிகளுக்கு பள்ளிக்கல்வித் துறையின் சார்பாக நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 1 கோடியே 46 இலட்சத்து 1 ஆயிரம் மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், வி.மேட்டுப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 4 வகுப்பறைகள், 1 அறிவியல் ஆய்வகம், 2 ஆண்கள் கழிப்பறைகள், 2 பெண்கள் கழிப்பறைகள் கட்டும் பணி மற்றும் குடிநீர் வசதியோடு இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ரூபாய் 78 லட்சத்து 18 ஆயிரம் மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கொங்கணாபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 4 வகுப்பறைகள், ஒரு பெண்கள் கழிப்பறை கட்டும் பணிகள் மற்றும் குடிநீர் வசதி அமைக்கும் பணிக்கும் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ரூபாய் 1 கோடியே 46 லட்சம் மதிப்பீட்டில் எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், எடப்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 10 வகுப்பறைகள், ஒரு அறிவியல் ஆய்வகம், 2 பெண்கள் கழிப்பறைகள் கட்டும் பணி மற்றும் குடிநீர் வசதி அமைப்பதற்கும், ரூபாய் 98 லட்சத்து 49 ஆயிரம் மதிப்பீட்டில் எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 4 வகுப்பறைகள், 2 ஆண்கள் கழிப்பறைகள், 2 பெண்கள் கழிப்பறைகள் கட்டும் பணி மற்றும் குடிநீர் வசதி அமைக்கும் பணிக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ரூபாய் 1 கோடியே 91 லட்சத்து 61 ஆயிரம் மதிப்பீட்டில் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், சவரியூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 4 வகுப்பறைகள், ஒரு அறிவியல் ஆய்வகம், 2 ஆண்கள் கழிப்பறைகள், 2 பெண்கள் கழிப்பறைகள், சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் மற்றும் குடிநீர் வசதி அமைக்கும் பணிக்கும், ரூபாய் 1 கோடியே 41 லட்சத்து 93 ஆயிரம் மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 6 வகுப்பறைகள், ஒரு ஆண்கள் கழிப்பறை, ஒரு பெண்கள் கழிப்பறை கட்டும் பணி மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி, குடிநீர் வசதி அமைக்கும் பணிக்கும், ரூபாய் 1 கோடியே 66 லட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கொங்கணாபுரம் கே.ஏ.என். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு

6 வகுப்பறைகள், 1 அறிவியல் ஆய்வகம், 2 ஆண்கள் கழிப்பறைகள் கட்டும் பணி மற்றும் குடிநீர் வசதி அமைக்கும் பணிக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ரூபாய் 96 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், குஞ்சாம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 4 வகுப்பறைகள், ஒரு ஆண்கள் கழிப்பறை, ஒரு பெண்கள் கழிப்பறை, சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் மற்றும் குடிநீர் வசதி அமைக்கும் பணிக்கும், என மொத்தம் ரூபாய் 11 கோடியே 54 லட்சத்து 23 ஆயிரம் மதிப்பீட்டில் 8 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 42 புதிய வகுப்பறைகள், 4 அறிவியல் ஆய்வகங்கள், மாணவ, மாணவியர்களுக்கான 21 கழிப்பறைகள், 3 பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிகளுக்கும், 8 பள்ளிகளுக்கு குடிநீர் வசதி அமைக்கும் பணிகளுக்கும் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய் 22 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், இருப்பாளி ஊராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஆக மொத்தம் இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்நிகழ்ச்சியின் வாயிலாக ரூபாய் 11 கோடியே 76 இலட்சத்து 88 ஆயிரம் மதிப்பீட்டில் 9 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ள எடப்பாடி நகராட்சி புதிய அலுவலகக் கட்டடத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்வதற்கு ரூபாய் 3.25 கோடிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்படுள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மக்கள் வைத்த கோரிக்கைகளை எல்லாம் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். 2016 சட்டமன்றத் தேர்தலில் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்த பல்வேறு வாக்குறுதிகளை அம்மாவின் அரசு படிப்படியாக செயலாக்கிக் கொண்டிருக்கிறது. தேர்தல் நேரத்தில் எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் வைத்த கோரிக்கைகளான பாலிடெக்னிக் கல்லூரி, பி.டெக்

கல்லூரி, சிட்கோ தொழிற்பேட்டை, புறவழிச் சாலை என அனைத்தையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஜலகண்டாபுரத்தில் புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்பதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய இருக்கின்றோம். எடப்பாடி தொகுதி மக்கள் வைத்த பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கிறன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**